பாடம் 6 நவம்பர் 8, 2025



# உள்ளே இருந்த எதிரி









“கர்த்தராகிய நானே ஒவ்வொருவனுக்கும், அவனவன் வழிகளுக்கும் செய்கைகளின் பலன்களுக்கும் தக்கதைக் கொடுக்கும்படிக்கு, இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவருமாயிருக்கிறேன்.”


எரேமியா 17:10


நியாயமற்ற இராணுவ தந்திரோபாயத்திற்கு பிறகு, எரிகோவின் சுவர்கள் இடிந்து விழுந்தன. இஸ்ரவேல் நகரத்திற்குள் நுழைந்து அதை தரைமட்டமாக்கியது. வெற்றி! யாருடையது? தேவனுடையது, ஏனென்றால் இஸ்ரவேலுக்கு அதில் எந்த சம்மந்தமும் இல்லை.



நன்கு திட்டமிட்ட இராணுவ தந்திரத்திற்கு பிறகு, ஆயி வெற்றி பெற்றது. தோல்வி! யாரால்? இஸ்ரவேல் மக்களால், ஏனென்றால் அவர்கள் தேவனை நம்பவில்லை.

இறுதியாக அவர்கள் தேவனிடம் கேள்வி கேட்ட போது, மிகவும் உறுதியான பதில் வந்தது: இஸ்ரவேல் பாவம் செய்து விட்டது, இனி அதன் எதிரிகளை வெல்ல முடியாது. அது எவ்வாறு மீண்டும் தெய்வீக தயவை பெற முடியும்?






- தோல்விக்கான காரணம் (யோசுவா 7:1-5, 10-13)
- திகைப்பு மற்றும் துயரம் (யோசுவா 7:6-9)
- பாவம் செய்தவரை கண்டறிதல் (யோசுவா 7:14-19)
- ஆகானின் பாவம் (யோசுவா 7:20-26)
- மீண்டும் ஜெயம் (யோசுவா 8:1-29)

# தோல்விக்கான காரணம்

"இஸ்ரவேலர் பாவஞ்செய்தார்கள்; நான் அவர்களுக்குக் கட்டளையிட்ட என் உடன்படிக்கையை மீறினார்கள்; சாபத்தீடானதில் எடுத்துக்கொண்டதும், களவுசெய்ததும், வஞ்சித்ததும், தங்கள்பண்டம்பாடிகளுக்குள்ளே வைத்ததும் உண்டே.(யோசுவா 7:11)

எரிகோவிற்கு அனுப்பப்பட்ட உளவாளிகளிடமிருந்து சாதகமான அறிக்கைக்கு பிறகு, யோசுவா தேவனிடம் ஆலோசனை கேட்டு, நகரத்தை கைப்பற்றுவதற்கான தந்திரத்தை அவரிடமிருந்து பெற்றார்.




ஆயிக்கு அனுப்பப்பட்ட உளவாளிகளிடமிருந்து அறிக்கையைப் பெற்ற பிறகு, யோசுவா அதையே செய்திருந்தால், 36 பேரின் மரணத்தை தவிர்த்திருக்கலாம்(யோசுவா 7:1-5).

ஆனால் உண்மையான காரணம் என்ன, அல்லது ஆயியை தாக்க வேண்டாம் என்று யோசுவாவிடம் தேவன் கூறியதற்கான காரணம் என்ன (யோசு. 7:11)?




"இஸ்ரவேலர்கள் பாவம் செய்தார்கள்" என்பதை தேவன் பார்த்தார். வேதத்தில் எங்கும் பாவம் இவ்வளவு நுணக்கங்களுடன் விவரிக்கப்படவில்லை: "அவர்கள் மீறினார்கள்... அவர்கள் எடுத்துக்கொண்டார்கள்... அவர்கள் களவு செய்தார்கள்... அவர்கள் வஞ்சித்தார்கள்... தங்கள் பண்டம்பாடிகளுக்குள்ளே வைத்ததுக்கொண்டார்கள்."

பன்மையை கவனியுங்கள். பாவம் ஒரு மனிதனால் செய்யப்பட்டது, ஆனால் தேவன் எல்லா மக்களையும் பொறுப்பாக்குகிறார். அவர்கள் உடன்படிக்கையை மீறினார்கள்; பாவத்தை இஸ்ரவேலிலிருந்து எடுப்பதற்கு அதை வேரோடு பிடுங்க வேண்டியிருந்தது.



# திகைப்பு மற்றும் துயரம்

"யோசுவா: ஆ, கர்த்தராகிய ஆண்டவரே, எங்களை அழிக்கும்படிக்கு எமோரியர் கைகளில்ஒப்புக்கொடுப்பதற்காகவா தேவரீர் இந்த ஜனத்தை யோர்தானைக் கடக்கப்பண்ணினீர்? நாங்கள்யோர்தானுக்கு அப்புறத்தில் மனத்திர்ப்தியாக இருந்துவிட்டோமானால் நலமாயிருக்கும். " (யோசுவா 7:7)





ஆயியில் ஏற்ப்பட்ட தோல்வியால் யோசுவாவும் மூப்பர்களும் கலக்கமடைந்தனர். மேலும் அவர்கள் துக்கத்தின் தெளிவான அறிகுறிகளை காட்டினர் (யோசு. 7:6).

இஸ்ரவேலர் 40 வருடங்களாக அலைந்து திரிந்தபோது மீண்டும் மீண்டும் செய்ததை போன்ற ஒரு கோபத்துடன் யோசுவா பின்னர் எதிர்வினையாற்றுகிறார்: "யோசுவா: ஆ, கர்த்தராகிய ஆண்டவரே, எங்களை அழிக்கும்படிக்கு எமோரியர் கைகளில்ஒப்புக்கொடுப்பதற்காகவா தேவரீர் இந்த ஜனத்தை யோர்தானைக் கடக்கப்பண்ணினீர்? நாங்கள்யோர்தானுக்கு அப்புறத்தில் மனத்திர்ப்தியாக இருந்துவிட்டோமானால் நலமாயிருக்கும்." (யோசு. 7:7).

இருப்பினும், யோசுவாவின் மனப்பான்மை பாலைவனத்தில் இஸ்ரவேலர்களை போலவே இல்லை. அவரது புகார் ஏமாற்றத்தால் தூண்டபடவில்லை, மாறாக புறஜாதியினரிடையே தேவனுடைய பெயர் அவமதிக்கப்படும் என்ற பயத்தால் தூண்டப்பட்டது (யோசு. 7:8-9).



தேவனுடைய மக்கள் எவ்வாறு செயல்பட்டார்கள் என்பதைப் பொறுத்து, அவிசுவாசிகள் தேவனுடைய குணாதிசயங்களை விளக்குவார்கள் என்பதை அவர் தெளிவாகக் கண்டார்கள். இன்று நாம் உலகில் தேவனுடைய சாட்சியாக தொடர்ந்து இருக்கிறோம். என்ன ஒரு பெரிய பொறுப்பு!

# பாவம் செய்தவரை கண்டறிதல்

"காலையில் நீங்கள் கோத்திரம் கோத்திரமாக வரவேண்டும்; அப்பொழுது கர்த்தர் குறிக்கிற கோத்திரம் வம்சம் வம்சமாக வரவேண்டும்; கர்த்தர் குறிக்கிற வம்சம் குடும்பம் குடும்பமாக வரவேண்டும்; கர்த்தர் குறிக்கிற குடும்பம் பேர்பேராக வரவேண்டும் என்று சொல்." (யோசுவா 7:14)



கூட்டுப் பாவத்தை (முழு மக்களின் பாவத்தையும்) நீக்க, பாவி நீக்கப்படவேண்டும் (யோசு. 7:15). நீக்கப்படவேண்டுமா? அவன் மனந்திரும்பினால் அவனுக்கு மன்னிப்பு கிடைக்காதா? நிச்சயமாக அவன் மன்னிக்கப்படுவான்! ஆனால் ஆகான் உண்மையான மனந்திரும்புதலின் எந்த அறிகுறியையும் காட்டவில்லை (மேலும் அவ்வாறு செய்ய அவனுக்கு ஏராளமான வாய்ப்புகள் இருந்தன).

| | |
|---|---|
| விசாரணை செயல்முறை அறிவிக்கப்பட்டு மறுநாள் வரை ஒத்திவைக்கப்பட்டது (யோசு. 7:14-15) | ஆகான் மௌனம் |
| யூதா கோத்திரம் குறிக்கப்பட்டது (யோசு. 7:16) | ஆகான் மௌனம் |
| சேராவின் குடும்பம் குறிக்கப்பட்டது (யோசு. 7:17மு) | ஆகான் மௌனம் |
| தலைவர் சப்தி குறிக்கப்பட்டார் (யோசு. 7:17பி) | ஆகான் மௌனம் |
| ஆகான் குறிக்கப்பட்டான் (யோசு. 7:18) | ஆகான் மௌனம் |



தெய்வீக தயவையும் அன்பையும் பிரதிபலித்து, யோசுவா ஆகானை தன் பாவத்தை அறிக்கையிட சொன்னார் (யோசு. 7:19).

ஆகானின் வழக்கு தோற்றது. அவர் ஒப்புக்கொண்டார், ஆனால் மன்னிப்பு கேட்கவில்லை (யோசு. 7:20). ஆனால் தேவன் அவனுடைய இருதயக் கடினத்தை கண்டு துக்கமடைந்தார், மனந்திரும்புதலுக்கான ஒவ்வொரு அழைப்பிலும் அதை வெளிப்படுத்தினார்.




# ஆகானின் பாவம்

"கொள்ளையிலே நேர்த்தியான ஒரு பாபிலோனிய சால்வையையும், இருநூறு வெள்ளிச்சேக்கலையும், ஐம்பது சேக்கல் நிறையான ஒரு பொன்பாளத்தையும் நான் கண்டு, அவைகளை இச்சித்து எடுத்துக்கொண்டேன்; இதோ, அவைகள் என் கூடாரத்தின் மத்தியில் பூமிக்குள் புதைத்திருக்கிறது. வெள்ளி அதின் அடியிலிருக்கிறது என்றான்." (யோசுவா 7:21)

யோசுவா ஆகானிடம் தேவனுக்கு மகிமை செலுத்தி, தன் பாவத்தை அறிக்கையிடும்படி கேட்டார் (யோசு. 7:19). அது அவருக்கு கடைசி வாய்ப்பு. அவர், ஒப்புக்கொண்ட போது, மன்னிப்பு கேட்டிருந்தால்... ஆனால் அவர் அப்படி செய்யவில்லை, அவருக்கு மன்னிப்பும் இல்லை (எண். 15:30-31).

ஏவாளைப் போலவே, ஆகானும் "பார்த்தான்," "விரும்பினான்," "எடுத்துக்கொண்டான்," அவனுடைய பாவம் பலரை பாதித்தது (ஆதி. 3:6). அனனியா மற்றும் சப்பிராளைப் போலவே, ஆகான் தேவனுக்கு அற்பணிக்கப்பட்ட சபிக்கப்பட்ட சில பொருட்களை எடுத்து அவற்றிற்கு பணம் செலுத்தினான் (அப் 5:1-2).








எரிகோவில் ஆகான் எடுத்த முடிவுகள் இராகாபின் முடிவுகளுக்கு முற்றிலும் எதிரானவை:

| இராகாப் | ஆகான் |
|---|---|
| அவர் உளவாளிகளை கூரையில் மறைத்து வைத்தார் | அவன் கொள்ளைப் பொருளை தரையில் மறைத்து வைத்தான் |
| அவர் இஸ்ரவேலிடம் இரக்கத்துடன் நடந்துகொண்டார் | அது இஸ்ரவேலுக்கு சிக்கலை கொண்டு வந்தது |
| அவர் தனது நம்பிக்கையின் காரணமாக வெற்றியை விரும்பினார் | அவன் தன் செயல்களால் தோல்வியை ஏற்படுத்தினான் |
| அவர் இஸ்ரவேலுடன் ஒரு உடன்படிக்கை செய்தார் | அவன் இஸ்ரவேலின் உடன்படிக்கையை மீறினான் |
| அவர் தனது உயிரையும் தனது குடும்பத்தினரின் உயிரையும் விடுவித்தார் | அவன் தன் குடும்பத்துடன் மரித்தான் |

# மீண்டும் ஜெயம்

"அப்பொழுது கர்த்தர் யோசுவாவை நோக்கி: நீ பயப்படாமலும் கலங்காமலும் இரு; நீ யுத்த ஜனங்கள் யாவரையும் கூட்டிக்கொண்டு எழுந்து, ஆயிபட்டணத்தின்மேல் போ, இதோ, ஆயியின் ராஜாவையும் அவன் ஜனத்தையும் அவன் பட்டணத்தையும் அவன் நாட்டையும் உன் கையில் ஒப்புக்கொடுத்தேன். " (யோசுவா 8:1)



எரிகோவை போலவே, ஆயியை வெல்ல யோசுவாவுக்கு தேவன் ஒரு உத்தியை கொடுத்தார் (யோசு. 8:1-2).



இரவில், நகரத்திற்கு பின்னால் ஒரு பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தப்பட்டது. விடியற்காலையில், இராணுவம் ஆயியை நெருங்கி, மீண்டும் அவர்களுக்கு முன்பாக தப்பி ஓடுவது போல் நடித்தது.

மோசே அமலேக்கியர்களை கொல்லும்வரை தனது கோலை உயர்த்திய போது, தேவனுடைய கட்டளைப்படி, யோசுவா தனது "ஆயுதத்தை" (அநேகமாக எகிப்தியர்களால் பயன்படுத்தப்பட்ட அரிவாள்), முழுமையான வெற்றி பெறும்வரை அதை உயர்த்தி வைத்திருந்தார் (யோசு. 8:18-22, 26).



தேவன் மீண்டும் ஒருமுறை தம் மக்களுக்கு வெற்றியைக் கொடுத்தார். ஆகானும் அவன் குடும்பத்தினரும் கொல்லப்பட்ட ஆகோர் பள்ளத்தாக்கு, வெற்றிக்கான கதவைத் திறந்தது, ஒரு "நம்பிக்கையின் கதவு" (ஓசியா 2:15).

நாம் விசுவாசத்தினால் தெய்வீக மன்னிப்பை ஏற்றுக்கொள்ளும்போது, தேவன் நம் பாவத்தை ஆகோரில் புதைத்து, நம்பிக்கைகான கதவைத் திறக்கிறார்.